# தமிழர் விடுதலைக் கூட்டணி
# அமைப்பு விதிகள்

(24.06.1978 இல் நிறைவேற்றப்பட்டன)

2019ம் ஆண்டு வரை

நிறைவேற்றப்பட்ட திருத்தங்களுடன்

# தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பு விதிகள்

## (24.06.1978 இல் நிறைவேற்றப்பட்டன)

**முன்னுரை**

தமிழ் தேசிய இனத்தின் வரலாற்றில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கட்டத்தில் இலங்கை குடியரசாக பிரகடனம் செய்யப்பட்ட சிங்களத்தேசிய இனத்தின் இறைமை பூரணத்துவம் பெற்ற நேரத்தில், பல்வேறு கட்சிகளாக பிரிந்திருந்த தமிழ் தேசிய இனம் தனது இறைமையை வென்றெடுக்கும் பொருட்டு ஒன்று சேர்ந்து, 1971இல் வல்வெட்டித்துறையில் ஆரம்பித்து, 1972இல் திருகோணமலையில் உறுதியான அமைப்பைப் பெற்று, 1976இல் பண்ணாகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மலர்ந்தது. 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஈழத்தமிழ்தேசிய இனத்தின் ஒரே அமைப்பாக மிகப்பெரும்பான்மை வாக்குகளினால் அங்கிகரிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி கட்டுக்கோப்பாக விடுதலை இயக்கமாக அமையும் பொருட்டும், வெவ்வேறு தொழிற்சங்கங்களிலும், நிறுவகங்களிலும் இருக்கும் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை கட்டிக்காக்கும் பொருட்டும், 1978ம் ஆண்டு யூன் மாதம் 24ம் திகதி மட்டக்களப்பில் கூடிய கூட்டணிப் பொதுச் சபை இவ் அமைப்பு விதிகளை அங்கிகரிக்கின்றது.

### விதி – 01

**பெயர் :**

இந்த நிறுவகம் "தமிழர் விடுதலைக் கூட்டணி என்று பெயர் பெறும். பின்வரும் விதிகளில் "கூட்டணி" என்று குறிப்பிடப்படும்.

### விதி – 02

**நோக்கம் :**

அந்நிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பால் இழந்த தமிழ் தேசிய இனத்தின் இறைமையை மீட்டு, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழ விடுதலையைக் காணல்.

### விதி – 03

**அடிப்படைக் கொள்கைகள் :**

3.1. எந்த ஒரு பிரதேசமோ மதமோ ஏனைய பகுதிகள் அல்லது மதங்கள் மீது ஆதிக்கம் செலுத்தாத வகையில் மதச்சார்பற்ற, சோசலிச, இணைப்பாட்சி அடிப்படையில் தமிழீழ அரசு அமையும்.

3.2. தமிழீழத்தின் அங்கமான முசிலிம் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஒரு சுயாட்சி மாகாணம் அவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் அமைக்கப்படும்.

3.3. இலங்கையை தாயகமாக கொண்ட தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவருக்கும் தமிழ் ஈழத்திலோ, சிறீலங்காவிலோ பூரண குடியுரிமையை நிலைநாட்டுதல்.

3.4. உயர்வு, தாழ்வு, வேற்றுமை என்று கற்பிக்கும் சாதி அமைப்பினை ஒழித்து, சாதி இல்லாத சமத்துவ சமுதாயத்தை உருவாக்குதல்.

3.5. இலங்கை முழுவதிலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய, மொழி, கலாச்சார உரிமைகளைப் பாதுகாத்தல்.

3.6. அடிப்படை சனநாயக உரிமைகளைப் பாதுகாத்து தொழிலின் கௌரவத்தை ஏற்று மனிதனை மனிதன் சுரண்டாத, சோசலிச திட்டமிடலின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்குதல்.

3.7. சிங்கள இனத்தோடும், நாட்டோடும் சமாதானமான சகவாழ்வும் ஒத்துழைப்பும் என்ற அடிப்படையில் நட்புறவை நிலைநாட்டுதல்.

## விதி – 04

**உறுப்புரிமை :**

4.1. கூட்டணியின் நோக்கங்களையும், அடிப்படைக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எவரும் கூட்டணியின் உறுப்புரிமைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்.

4.2. விண்ணப்பிக்கும் எவரும் "நான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியங்களையும், கட்டுப்பாடுகளையும் ஏற்றுக்கொள்கிறேன். என்று இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்" என்ற வாக்குறுதியைச் செய்து உறுப்புரிமை படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

4.3. உறுப்புரிமைக் கட்டணமாக ஒருவர் ஒருவருடத்திற்குப் பத்து ரூபா அல்லது அரை வருடத்திற்கு ஐந்து ரூபா அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு ரூபா செலுத்தல் வேண்டும்.

4.4. உறுப்புரிமை விண்ணப்பத்தையும், உறுப்புரிமைக் கட்டணத்தையும் தான் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள கூட்டணியின் மூலக்கிளைச் செயலாளரிடம் கொடுத்தல் வேண்டும்.

4.5. கூட்டணியின் மூலக்கிளை இல்லாத பகுதியில் வசிப்போர் உறுப்புரிமை விண்ணப்பத்தையும் கட்டணத்தையும் நேரே தலைமைச் செயலகத்துக்கு அனுப்பலாம். விண்ணப்பிப்போருக்கு கிட்டிய மூலக்கிளையில் அவரை உறுப்பினராகச் சேர்க்கும் உரிமை கூட்டணியின் அமைப்பு நிர்வாகச் செயலாளருக்கு உண்டு.

4.6. ஒவ்வொரு விண்ணப்பமும் மூலக்கிளைச் செயலாளரால் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு கூட்டணியின் மத்திய செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு விண்ணப்பத்தையும் காரணம் வெளிக்கூறாமல் நிராகரிக்க மத்திய செயற்குழுவிற்கு உரிமை உண்டு.

4.7. உறுப்பினர் ஒருவர் கீழ்வரும் காரணங்களினால் உறுப்புரிமையை இழப்பர் :-

அ. உறுப்புரிமைப் பணம் செலுத்தப்படாத மூன்று மாதங்களுக்கு மேல் நிலுவை இருந்தால் கட்டணம் செலுத்தி மீண்டும் புதுப்பிக்கும் வரை உறுப்புரிமை இழப்பர்.

ஆ. கூட்டணியின் கட்டுப்பாட்டையோ, கொள்கைகளையோ மீறிய நடத்தைக்காக ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் சிபாரிசின் பெயரில் மத்திய செயற்குழுவினால் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்படுவார்.

இ. கூட்டணியின் பதவியாளராக இருந்து ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் சிபாரிசின் பேரில் பொதுக்குழுவினால் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்படுவார்.

ஈ. கூட்டணிக்கு ஏற்படக் கூடிய பாரிய தீமையை தடுக்கும் பொருட்டு செயலாளர் நாயகத்தால் “அவசிய ஒழுங்கு” நடவடிக்கையாக உறுப்புரிமையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்கு பாராப்படுத்தப்பட்டவர் அல்லது ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினால் இடைநீக்கம் செய்யப்பட்டு மத்திய செயற்குழுவின் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் உள்ளவர் அக்காலத்தில் உறுப்புரிமையை இழப்பர்.

## விதி – 05

### கூட்டணியின் தொகுப்பு :

கூட்டணி பின்வருவனவற்றால் தொகுப்புறும் :

5.1. கூட்டணியின் அங்கத்தினர்.

5.2. மூலக்கிளைகள்.

5.3. தொகுதிக் கிளைகள்.

5.4. செயற்குழுவின் மத்திய அங்கீகாரம் பெற்ற கிளைகள்.

5.5. தமிழ் இளைஞர் பேரவை.

5.6. தமிழ் மகளிர் பேரவை.

5.7. கூட்டணிப் பாராளுமன்றக் குழு.

5.8. பொதுக்குழு.

5.9. மத்திய செயற்குழு.

5.10. வருடாந்த மாநில மாநாடும் சிறப்பு மாநாடுகளும்.

5.11. செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணைந்த மத்திய நிறுவகங்கள்.

## விதி – 06

### மூலக் கிளைகள் :

6.1. ஒரு கிராமசேவையாளர் பகுதிக்கு ஒன்றாக முலக்கிளைகள் மத்திய செயற்குழுவினால் நிறுவப்படும்.

6.2. கிராமசேவையாளர் பகுதிக்கு ஒருகிளை அமைப்பது சாத்தியமாகதவிடத்து ஒன்றுக்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பகுதிகளை சேர்க்கவோ அல்லது ஒரு கிராம சேவையாளர் பகுதியைப் பிரிக்கவோ மத்திய செயற்குழுவிற்கு அதிகாரமுண்டு.

6.3. ஒவ்வொரு தொகுதியிலும் கிளைகளை நிறுவுவதற்குப், பொறுப்பாகத் தேவை ஏற்படுமிடத்து தொகுதி அமைப்பாளர் ஒருவரை மத்திய செயற்குழு நியமிக்கும்.

6.4. மத்திய செயற்குழுவின் கட்டளைப்படி மூலக்கிளைகளை அமைப்பதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்ற வேண்டிய தேவை ஏற்படின் அதுபற்றி மத்திய செயற்குழுவுக்கு விதந்துரைப்பதற்கும், மூலக்கிளை அமைப்புக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி கிளைப்பதவியாளர், செயற்குழு உறுப்பினர் ஆகியோரின் தெரிவை வழி நடத்துவதற்கும், தொகுதிக்கிளைகளுக்கு மூலக்கிளையின் தலைவர், செயலாளர் தவிர்ந்த மூன்றாவது உறுப்பினர் தெரிவு பற்றி மூலக்கிளை செயற்குழுவுக்கு ஆலோசனை வழங்கவும், தொகுதி அமைப்பாளருக்கு அதிகாரமுண்டு.

6.5. ஒவ்வொரு மூலக்கிளையும் ஒரு தலைவர், ஒரு துணைத்தலைவர், ஒரு செயலாளர், ஒரு துணைச்செயலாளர், ஒரு பொருளாளர் ஆகிய ஐந்து பதவியாளரையும் ஐந்து முதல் பத்து செயற்குழு உறுப்பினரையும் கொண்டு இயங்கும்.

6.6. மூலக்கிளைகள் செயற்படும் விதிகளை மத்திய செயற்குழு அமைக்கலாம்.

6.7. மத்திய செயற்குழுவினால் வகுக்கப்பட்ட கொள்கைகளையும், வேலைத்திட்டத்தையும் கொண்டொழுகுவது ஒவ்வொரு மூலக்கிளையினதும் கடமையாகும். இக்கடமையில் தவறும் மூலக்கிளைகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவற்றைக் கலைக்கவோ, பதவியாளரையும் செயற்குழுவையும் நீக்கி புதிய தேர்தல் நடத்தவோ மத்திய செயற்குழுவுக்கு அதிகாரமுண்டு.

6.8. ஒவ்வொரு மூலக்கிளையினதும் வருடாந்த கூட்டம், கூட்டணியின் மாநில மாநாட்டிற்கு நியமிக்கப்பட்ட திகதிக்கு இரண்டு மாதங்களின் முன்பாவது கூட்டப்படல் வேண்டும்.

6.9. ஏழு நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தலுடன் கிளையின் செயலாளர் வருடாந்தப் பொதுக்கூட்டத்தைக் கூட்டல் வேண்டும். அக் கூட்டத்தில் கிளையின் பதவியாளர், செயற்குழு உறுப்பினர் தெரிவும், கிளைப்பொருளாளரின் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தலும், கிளைச் செயலாளரின் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தலும் இடம் பெறும்.

6.10. மூலக்கிளையின் செயலாளர் கிளையின் அங்கத்தவர் பட்டியலை வைத்துக் கொள்ளல் வேண்டும். அதன் பிரதி ஒன்றையும் அங்கத்தவர் விண்ணப்பப் படிவங்களையும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். வருடாந்தக் கூட்ட முடிவில் புதிய அங்கத்தினர் பட்டியலையும், அவர்களின் விண்ணப்பப் படிவங்களையும், அங்கத்தவர் மாற்ற விபரங்களையும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

6.11. ஒவ்வொரு மூலக்கிளைப் பொருளாளரும் அங்கத்தவர் உறுப்புரிமைப்பணம் அன்பளிப்பு ஆகியவற்றால் சேர்க்கப்பட்ட தொகைகளுக்குச் சரியான கணக்குகள் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

6.12. ஒவ்வொரு மூலக்கிளையிலும் சேர்க்கப்பட்ட உறுப்புரிமைப் பணத்தொகையில் இருபது வீதத்தை செலவிற்கு வைத்துக் கொண்டு தொகுதிக் கிளைக்கு உரிய நாற்பது வீதத்தையும் தொகுதி அமைப்பாளரிடம் செலுத்த வேண்டியது பொருளாளரின் கடமையாகும்.

6.13. கிளையின் அங்கத்தவர் பட்டியலை வைத்திருத்தல், வரவு செலவுக் கணக்கு வைத்திருத்தல் ஆகியவற்றுக்கு கிளைத்தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் மத்திய செயற்குழுவிற்குக் கூட்டுப் பொறுப்புடையவர்.

6.14. “மூலக்கிளை அப்போதைக்குள்ள பொதுப் பிரச்சனை குறித்து ஏகமனதாக தீர்மானம் எடுக்குமிடத்து அப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அத் தீர்மானத்துக்கு ஆதரவாகச் செயற்படல் வேண்டும்”

## விதி – 07

### தொகுதிக் கிளைகள் :

7.1. தமிழீழத்திலுள்ள ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தல் தொகுதியிலும் கூட்டணியின் ஒரு தொகுதிக் கிளை அமையும்.

7.2. இலங்கையின் மற்றப்பாகங்களிலுள்ள மூலக்கிளைகள் ஒன்றுக்கு மேற்பட்டவை ஒரு தொகுதிக் கிளையாக மத்திய செயற்குழுவால் அமைக்கப்படலாம்.

7.3. மூலக்கிளையின் தலைவர், செயலாளரின், அமைப்பாளரின் ஆலோசனையோடு செயற்குழுவால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரும் ஆகிய மூவரும் தொகுதிக் கிளையின் அங்கத்தவராவர். தொகுதிக் கிளையின் பிரதிநிதித்துவம் பெறாத பகுதிகளின் சார்பில் ஐவரை தொகுதிக் கிளைத் தலைவர் தொகுதிக் கிளைக்கு நியமிப்பார்.

7.4. கூட்டணி மத்திய செயற்குழவினால் தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டவர் தொகுதிக்கிளை உறுப்பினராகவும், முதலாண்டுத் தலைவராகவும் இருப்பார்.

7.5. ஒவ்வொரு தொகுதிக்கிளையும் ஒரு தலைவர், ஒரு துணைத்தலைவர், ஒரு செயலாளர், ஒரு துணைச்செயலாளர், ஒரு பொருளாளர் ஆகிய ஐந்து பதவியாளரையும் ஐந்து முதல் பத்து செயற்குழு உறுப்பினரையும் தெரிவு செய்து இயங்கும்.

7.6. ஒவ்வொரு தொகுதியிலும் அமைந்த மூலக்கிளைகளின் அலுவல்களை இணைப்பதும் ஒருமுகப்படுத்துவதும் தொகுதிக்கிளையின் முக்கிய கடமையாகும்.

7.7. கூட்டணியின் மாநில மாநாட்டிற்கு நியமிக்கப்பட்ட திகதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன் மூலக்கிளைகளின் வருடாந்தக் கூட்டத்தில் புதிய தொகுதிக் கிளைப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டவுடன் தொகுதிக்கிளை கூடி புதிய பதவியாளரையும், செயற்குழுவையும் தெரிவு செய்யும்.

7.8. ஐந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொகுதியிலிருந்து ஒவ்வொரு மேலதிக ஐந்நூறு உறுப்பினருக்கும் ஒருவர் வீதம் பொதுக்குழு உறுப்பினர் தொகுதிக் கிளையின் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர்.

7.9. கூட்டணியின் மாநில மாநாட்டிற்கு தொகுதியாளர்களாகப் பங்குபற்றும் பதினைந்து பேரும், ஐந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களில் ஒவ்வொரு ஐம்பது உறுப்பினருக்கும் ஒரு பொருளாளரும் தொகுதிக் கிளையால் தெரிவு செய்யப்படுவர்.

7.10. மூலக்கிளைகளினால் செலுத்தப்படும் தலைமை அலுவலகத்துக்குரிய நாற்பது வீதம் உறுப்புரிமை பணத்தைத் தலைமை அலுவலகத்தில் சேர்ப்பதற்கும், தொகுதிக் கிளைக்குரிய நாற்பது வீதம் பணத்திற்கு முறையான வரவுசெலவு கணக்குகள் வைத்து, தொகுதிக் கிளையின் கூட்டத்திலும், தலைமை அலுவலகத்துக்கும் சமர்ப்பிப்பதற்கும் தொகுதிக்கிளையின் பொருளாளர் பொறுப்பாவர்.

7.11. தொகுதியிலுள்ள மூலக்கிளைகள் மூலம் கூட்டணியின் கொள்கைகளையும், வேலைத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்குத் தொகுதிக் கிளையின் தலைவரும் செயலாளரும் கூட்டுப் பொறுப்புடையவர்.

## விதி – 08

**பொதுக் குழு :**

8.1. கூட்டணியின் நோக்கம், அடிப்படைக் கொள்கை, தேசிய மாநாட்டுத் தீர்மானம் ஆகியவற்றுக்கு அமைய செயல் திட்டங்கள் வகுப்பதும், கூட்டணியின் பரிபாலனமும், கூட்டணி பதவியாளரைத் தெரிவதும், ஐந்து மத்திய செயற்குழு உறுப்பினரைத் தெரிவதும் பொதுக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்டன.

8.2. ஒவ்வொரு தொகுதிக் கிளையினதும் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் பொதுக்குழு உறுப்பினராவர்.

8.3. ஐந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர் கொண்ட தொகுதிக்கிளையிலிருந்து ஒவ்வொரு மேலதிக ஐந்நூறு உறுப்பினருக்கும் ஒருவர் வீதம் தொகுதிக் கிளையால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் பொதுக் குழுவில் இடம் பெறுவர்.

8.4.
1. இளைஞர் பேரவையால் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேரும்.
2. மகளிர் பேரவையால் தெரிவு செய்யப்பட்ட ஏழு பேரும்.
3. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேரும்.
4. முசிலிம் ஐக்கிய முன்னனியால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேரும்.
5. இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பிரதிநிதிகள் இரண்டு பேரும்.
6. தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணிப் பிரதிநிதிகள் ஐந்து பேரும்.
7. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு பேரும்.
8. கூட்டணியின் பதவியாளர்கள் எல்லோரும்.
9. மத்திய செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும்.
10. பிரதிநிதித்துவம் பெறாத பகுதிகளின் சார்பில் தலைவரால் நியமிக்கப்பட்ட பத்துப் பேரும், பொதுக் குழு உறுப்பினராவர்.

8.5. மாநில மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களை ஆக்கும் விடயாலோசனைச் சபையாக மாநாட்டிற்கு முன் பொதுக்குழு கூடும்.

8.6. தக்க காரணத்திற்காகக் கூட்டணியின் எந்த பதவியாளர் மீதும், மத்திய செயற்குழு உறுப்பினர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பதவி நீக்கம் செய்யவும், உறுப்புரிமையிலிருந்து நீக்கவும் பொதுக் குழுவுக்கு அதிகாரமுண்டு.

8.7. விடயாலோசனைச் சபையாகக் கூடுவதைத் தவிர செயற்குழுவின் தீர்மானப்படி வேண்டிய போதும் இரு தொகுதிக் கிளைகள் கேட்டுச் செயற்குழு ஏற்றபோதும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் பொதுக்குழு கூட வேண்டும்.

8.8. மாநில மாநாட்டின் தீர்மானத்துக்கு அமைவாக மேற்பார்க்கும் எல்லா அதிகாரமும் பொதுக்குழுவுக்கே உண்டு.

8.9. பொதுக் குழுக் கூட்டத்துக்கு நிறைவெண் நாற்பது ஆகும்.

## விதி – 09

### மத்திய செயற்குழு :

9.1. கூட்டணியின் தலைவர், சிரேச்ட துணைத்தலைவர், செயலாளர் நாயகம், அமைப்பு நிருவாகச் செயலாளர், இரண்டு பொருளாளர்கள் ஆகிய ஆறு பதவியாளர்களும் பாராளுமன்றக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர்களும், இளைஞர் பேரவைப் பிரதிநிதி ஒருவரும், மகளிர் பேரவைப் பிரதிநிதி ஒருவரும் பொதுக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட ஐவரும் தலைவரால் தெரிவு செய்யப்பட்ட ஐவருமாக இருபத்தொரு உறுப்பினர்கள் மத்திய செயற்குழுவில் இடம்பெறுவர்.

9.2. மத்திய செயற்குழுவில் ஏற்படும் வெற்றிடத்துக்கு அவ்வவ்வமைப்போ, தலைவரோ ஒருவரைத் தெரிவு செய்வர்.

9.3. கூட்டணியின் குறிக்கோளை மாநில மாநாட்டின் தீர்மானத்திற்கிணங்கவும், பொதுக்குழுவின் முடிவுகளுக்கு அமைவாகவும் செயலில் உருவாக்கும் அதிகாரம் மத்திய செயற்குழுவிற்கே உரியது.

9.4. மத்திய செயற்குழு மாநில மாநாட்டிற்கே பொறுப்புக் கொடுக்கும் கடப்பாடுடையது.

9.5.
1. கூட்டணியின் மூலக்கிளைகள் தொகுதிக்கிளைகளை அமைத்தல்.
2. தொகுதி அமைப்பாளர்களை நியமித்தல்.
3. கிளைகளைக் கட்டுப்படுத்தல், ஆணை செலுத்துதல்.
4. கிளைகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்.
5. இணைந்த நிறுவனங்களை ஏற்றுக்கொள்ளுதல், நீக்குதல், அவற்றிற்கு ஆலோசனை கூறி உதவி செய்தல்.
6. கூட்டணி உறுப்பினர்களை ஏற்றுக்கொள்ளல், ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், இடை நீக்கம் செய்தல், உறுப்புரிமையில் இருந்து நீக்குதல்.
7. கிளைகள் இயங்குவதற்காக உப விதிகளையும் தனிப் பணிப்புகளையும் செய்தல்.
8. தக்க காரணத்திற்கு கிளையின் அமைப்பை அல்லது செயற்குழுவைக் கலைத்தல், புதிய அமைப்புச் செய்தல், தேர்தல் நடத்துதல்.
9. அங்கத்தவர்களுக்கும் கிளைகளுக்குமிடையே எற்படும் பிணக்குகளைத் தீர்த்தல்.
10. விசேட விசாரணைக்கும் நடவடிக்கைக்கும் உப சபைகளை நியமித்தல் ஆகிய அதிகாரங்கள் மத்திய செயற்குழுவுக்கே உரியவை.

9.6. கூட்டணிக்கு வேண்டிய நிதியை திரட்டலும், அதை தேவைக்கேற்ப உபயோகித்தலும், கிளைகள், தலைமைச் செயலகம் ஆகியவற்றின் கணக்குகளைப் பார்வையிடக் கணக்காய்வாளரை நியமித்தலும் மத்திய செயற்குழுவின் கடமையாகும்.

9.7. ஒழுங்கு நடவடிக்கைக் குழு, தேர்தல் நியமனக் குழு ஆகியவற்றை மத்திய செயற்குழுவே நியமிக்கும்.

9.8. வெற்றிடமாகும் பதவிகள் மத்திய செயற்குழுவினால் நிரப்பப்படும்.

9.9. மத்திய செயற்குழு மாதமொரு முறையும், தேவைப்பட்ட போதும் கூடல் வேண்டும்.

9.10. மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு நிறைவெண் ஏழு ஆகும்.

9.11. அடுத்த மூன்று மத்திய செயற்குழுக் கூட்டங்களுக்கு தகுந்த காரணம் இன்றி சமூகம் அளிக்காத அங்கத்தவர் தம் பதவியையும், செயற்குழு அங்கத்துவத்தையும் இழந்தவராகக் கருதப்படுவர்.

## விதி – 10

### மாநில மாநாடும் விசேட மாநாடும் :

10.1. மாநில மாநாடே கூட்டணியின் முழு அதிகாரத்திற்கும் நிலைக்களனாகும்.

10.2. மாநாட்டின் தீர்மானம் ஒவ்வொரு அங்கத்தவரையும் கட்டுப்படுத்தும்.

10.3. இரண்டு மாநாடுகளுக்கு இடையில் இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவாறு மாநாட்டிற்குரிய இடம், நாள் முதலியவற்றை மத்திய செயற்குழு தீர்மானிக்கும் விசேட காரணங்களுக்காகப் பொதுக்குழு மாநாட்டைப் பின் போடலாம்.

10.4. மாநாட்டின் கூட்டத்திற்கு முன் மூலக் கிளைகளின் வருடாந்தக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு, தொகுதிக் கிளைகள் அமைக்கப்பெற்று பொதுக் குழு உறுப்பினரும், மாநாட்டின் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

10.5. ஒவ்வொரு தொகுதிக்கும் பதினைந்து பிரதிநிதிகளும், ஐந்நூறுக்கு மேற்பட்ட ஒவ்வொரு ஐம்பது உறுப்பினர்களுக்கும் ஒரு பிரதிநிதியும், ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் மாநாட்டில் கலந்து வாக்களிக்கும் உரிமை பெறுவர்.

10.6. மாநாட்டை ஒழுங்கு செய்வதும், நடத்துவதும் மத்திய செயற்குழுவின் பொறுப்பாகும். மாநாடு நடைபெறும் தேர்தல் தொகுதியின் தொகுதிக்கிளை வரவேற்புக் குழுவாக அமைந்து உதவி செய்தல் வேண்டும்.

10.7. மாநாட்டின் கூட்டத்திற்கு செயலாளர் இருபத்தொரு நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

10.8. அவசர விடயத்திற்கு விசேட தேசிய மாநாட்டை மத்திய செயற்குழு கூட்டலாம். இம் மாநாட்டுக்கு பதினான்கு நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும்.

10.9. விசேட மாநாட்டில் அதற்கு முந்திய தேசிய மாநாட்டின் பிரதிநிதிகளே வாக்களிக்கும் உரிமை பெற்றவராவர்.

## விதி – 11

### தலைவர் :

11.1. கூட்டணியின் மாநில மாநாட்டிற்குக் குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன் பொதுக்குழுவின் விசேட கூட்டத்தில் தலைவர் தெரிவு செய்யப்படுவார்.

11.2. தேர்தலுக்கான விசேட பொதுக்குழுக் கூட்டத்துக்கு ஏழு நாட்களுக்கு முன் தலைவர் பதவிக்கு நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யும்படி செயலாளர் நாயகம் தொகுதிக் கிளைகளுக்கும், பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் அறிவிப்பார்.

11.3. அங்ஙனம் தலைவர் பதவிக்கு அனுப்பப்படும் நியமனங்கள், பொதுக் குழு உறுப்பினர் அறுவரினால் கையொப்பம் இடப்பட்டு அல்லது ஒரு தொகுதிக் கிளையினால் தீர்மானிக்கப்பட்டு எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட அபேட்சகரின் சம்மதத்தோடு செயலாளர் நாயகத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

11.4. விசேட பொதுக்குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்பதற்கு முன் எந்த வேட்பாளரும் தமது நியமனத்தை மீட்டுக் கொள்ள உரிமையுண்டு.

11.5. பொதுக்குழுக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தலைவர் தெரிவு நடைபெறும். தலைவராகத் தெரிவு செய்யப்படுபவர் சமுகமளித்துள்ள உறுப்பினரில் பெரும்பான்மையோரின் வாக்குகளை பெறுதல் வேண்டும்.

11.6. வருடாந்த விசேட மாநாடுகளிலும், பொதுக்குழு, மத்திய செயற்குழுவிலும் தலைவரே தலைமை வகிப்பார்.

11.7. தலைவர் சமூகமளிக்காத போது, சிரேட்ட துணைத்தலைவரும், அவரும் சமூகமளிக்காதவிடத்து ஏனைய துணைத்தலைவர்களிலொருவரும் சபை தேர்ந்தெடுத்த படி தலைமை வகிக்கலாம்.

11.8. துணைத்தலைவர்களில் ஒருவரை ஏதாவது ஒரு அலுவலையோ, குறிப்பிட்ட ஒரு திட்டத்தின் அமைப்பையோ மேற்பார்வை செய்யவும், பொதுவாகத் தம் கடமைகளை மேற்கொள்ளவும் தலைவர் நியமிக்கலாம்.

11.9. தலைவரும், சிரேட்ட துணைத்தலைவரும், செயலாளர் நாயகமும், இரு இணைப்பொருளாளரும் கூட்டணியின் எல்லா நிதிகளுக்கும், சொத்துக்களுக்கும் பாதுகாவலராவர்.

11.10. விதி 8.4 இன் கீழ் பொதுக்குழுவுக்கு நியமிக்கப்பட வேண்டிய 10 உறுப்பினரையும், விதி 9.1 இன் கீழ் பொதுக்குழுவுக்கு நியமிக்கப்பட வேண்டிய ஐந்து உறுப்பினர்களையும், செயலாளர் நாயகத்தின் ஆலோசனையோடு தலைவர் நியமிப்பார்.

11.11. தலைவர் பதவி வெற்றிடமானால், சிரேட்ட துணைத்தலைவர் எஞ்சிய காலத்திற்குத் தலைவராகப் பணியாற்றுவார். அவர் அவ்வாறு பணியாற்ற முடியாது போயின் துணைத்தலைவர்களில் ஒருவரை மத்திய செயற்குழு எஞ்சிய காலத்திற்குத் தலைவராகப் பணியாற்றுமாறு நியமிக்கும்.

## விதி – 12

### செயலாளர் நாயகம் :

12.1. செயலாளர் நாயகம் கூட்டணியின் பிரதான செயலாற்றும் அலுவலராவர். பொதுக்குழு, மத்திய செயற்குழு, தொகுதிக்கிளைகள், மூலக்கிளைகள், இணைந்த நிறுவனங்கள், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, ஆகியவற்றை ஒருமுகப்படுத்துவதும் மத்திய செயற்குழுவின் ஆணைக்கு அமைவாக கட்டுப்படுத்தி வழிநடத்துவதும் செயலாளர் நாயகத்தின் கடமையாகும்.

12.2. தேர்தலுக்கான விசேட பொதுக்குழுக் கூட்டத்துக்கு ஏழு நாட்களுக்கு முன் செயலாளர் நாயகம் பதவிக்கு நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும்படி செயலாளர் நாயகம் தொகுதிக் கிளைகளுக்கும், பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறிவிப்பார்.

12.3. அங்ஙனம் செயலாளர்நாயகம் பதவிக்கு அனுப்பப்படும். நியமனங்கள் பொதுக்குழு உறுப்பினர் அறுவரினால் கையொப்பமிடப்பட்டு அல்லது ஒரு தொகுதிக் கிளையினால் தீர்மானிக்கப்பட்டு எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட அபேட்சகரின் சம்மதத்தோடு செயலாளர் நாயகத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

12.4. தேர்தலுக்கான விசேட பொதுக்குழுக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் செயலாளர் நாயகம் தெரிவு செய்யப்படுவார்.

12.5. பொதுக்குழு, மத்திய செயற்குழு ஆகியவற்றின் நியமனங்கள் பற்றி தலைவர்க்கு ஆலோசனை கூறுவதும் கூட்டணியின் எல்லா நடைமுறைகளையும் தலைவரின் ஆலோசனையோடு வழிநடத்துதலும் செயலாளர் நாயகத்தின் பொறுப்பாகும்.

12.6. செயலாளர் நாயகத்திற்கு உதவியாக அவருடைய வழிநடத்தலின் கீழ் இயங்குவதற்கு கீழ் கண்ட செயலாளர்கள் பொதுச்சபையினால் தெரிவு செய்யப்படுவார்.

அ. அமைப்பு நிருவாகச் செயலாளர்.

ஆ. இளைஞர் பேரவை பொறுப்புச் செயலாளர்.

இ. தொழிற்சங்கப் பொறுப்புச் செயலாளர்.

ஈ. சட்டத்துறைச் செயலாளர்.

உ. பெருளாதாரச் செயலாளர்.

ஊ. மகளிர் பேரவைச் செயலாளர்.

12.7. கட்சியின் தலைமை அலுவலகத்துக்கும் பதிவேடுகளுக்கும் பொறுப்பாக இருப்பதும், ஏனைய அலுவலகங்களையும் கிளைகளையும் மேற்பார்வை செய்வதும் அமைப்பு நிருவாகச் செயலாளரின் கடமைகளாகும்.

12.8. இளைஞர் இயக்கத்தை வழிநடத்துவதும், இளைஞர் பேரவை அமைப்பு வேலைகளுக்குப் பொறுப்பாக இருத்தலும் இளைஞர் பேரவை பொறுப்புச் செயலாளரின் கடமைகளாகும்.

12.9. கூட்டணியோடு சேர்ந்த தொழிற்சங்கங்களை வளர்த்தலும், அவற்றுக்குச் சகல விதமான ஒத்துழைப்பை அளித்தலும் தொழிற்சங்கப் பொறுப்புச் செயலாளரின் கடமைகளாகும்.

12.10. கூட்டணியின் இயக்கம் சம்பந்தமாக எழக்கூடிய சட்டப் பிரச்சனைகளில் ஆலோசனை வழங்குதலும், பாதிக்கப்பட்டோருக்குச் சட்ட உதவிக்கு ஏற்பாடு செய்தலும் சட்டத்துறைச் செயலாளரின் கடமைகளாகும்.

12.11. தமிழ் ஈழத்தின் பொருளாதார வளர்ச்சி பற்றிய திட்டங்களைத் தயாரித்தலும், அவற்றைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய அமைப்புகளை உருவாக்குதலும் பெருளாதாரச் செயலாளரின் கடமைகளாகும்.

12.12. தமிழ் மகளிர் பேரவையை வழிநடத்தலும், தமிழ் மகளிர் பேரவை அமைப்பு வேலைகளுக்கு பொறுப்பாக இருத்தல் மகளிர் பேரவைப் பொறுப்புச் செயலாளரின் கடமைகளாகும்.

## விதி – 13

### இணைப்பொருளாளர் :

13.1. கூட்டணியின் நன்கொடைகள், உறுப்புரிமைக் கட்டணங்கள், மற்றும் வரவுகள் என்பவற்றால் சேரும் பணத்திற்குத் தனியாகவும், கூட்டாகவும் இணைப்பொருளாளரே பொறுப்புடையவர்.

13.2. மூலக்கிளையினதும் தொகுதிக்கிளையினதும் ஒவ்வொரு மாத நிதி விபரங்களையும் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன் பெற்று அவற்றை கேட்கப்படுமிடத்து மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இணைப்பொருளாளர் சமர்ப்பித்தல் வேண்டும்.

13.3. ஒவ்வொரு கிளையினதும் :

அ. அங்கத்தவர் பட்டியல்,

ஆ. புதிதாகப் பதிந்த அங்கத்தவர் பட்டியல்,

இ. கட்டணம் செலுத்தாத அங்கத்தவர் பட்டியல்,

ஈ. அங்கத்துவத்தின் மாற்றம்.

இவை பற்றிய விபரங்களைத் திரட்டி இணைப்பொருளாளர் மத்திய செயற்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்.

13.4. செயலாளர் நாயகத்தின் அனுசரனையோடு மூலக்கிளைகள், தொகுதிக்கிளைகளின் உறுப்பினரின் பட்டியலையும், கணக்குகளையும் பார்வையிடவோ, பரிசோதிக்கவோ, பரிசோதனை செய்விக்கவோ இணைப்பொருளாளருக்கு அதிகாரமுண்டு.

## விதி – 14

### பாராளுமன்றக்குழு :

14.1. கூட்டணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவாக அமைவர்.

14.2. மாநில மாநாட்டிலும், விசேட மாநாடுகளிலும் தீர்மானித்தவாறும் பொதுக்குழு, மத்திய செயற்குழு, ஆகியவற்றின் முடிவுகளுக்கு இயைபாகவும், கூட்டணியின் கொள்கைகளைத் தேசிய அரசுப் பேரவையில் செயல்படுத்தும் கடமை பாராளுமன்றக் குழுவுக்கு உண்டு.

14.3. கூட்டணியினால் முடிவெடுக்கப்படாத விடயங்களில் பாராளுமன்றக்குழு பெரும்பான்மையாக எடுக்கும் முடிவு தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்கள் எல்லோரையும் கட்டுப்படுத்தும்

14.4. கூட்டணியின் மத்திய செயற்குழுவுக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாராளுமன்றக்குழு தெரிவு செய்யும்.

14.5. கூட்டணியின் மாநில மாநாடு, விசேட மாநாடு, பொதுக்குழு, மத்திய செயற்குழு, பாராளுமன்றக்குழு ஆகியவற்றின் முடிவுகளுக்கு மாறாகச் செயற்படும் எந்த தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும் கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறியதாகக் கருதப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக்கப்படுவர்.

## விதி – 15

### ஒழுங்கு நடவடிக்கைக்குழு :

15.1. செயலாளர் நாயகத்தினால் தமக்கு சமர்ப்பிக்கப்படும் கூட்டணியின் எந்த உறுப்பினர் மீதான குற்றச்சாட்டையும் விசாரித்து அதற்குரிய தண்டனையை மத்திய செயற்குழுவுக்கு எடுத்தியம்ப ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு அதிகாரமுண்டு.

15.2. மத்திய செயற்குழு முடிவெடுக்கும் வரை எந்த உறுப்பினரையும் இடை நீக்கம் செய்வதற்கு செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை கூறும் அதிகாரம் இக் குழுவுக்குண்டு.

15.3. நடவடிக்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எந்த விடயத்தையும் ஒட்டி மூன்று மாதங்களுக்கிடையில் இறுதி முடிவெடுக்க வேண்டியது ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் கடமையாகும். தவறினால் மத்திய செயற்குழு உடன் நடவடிக்கை எடுக்கும்.

## விதி – 16

### தேர்தல் நியமனக்குழு :

16.1. தேசிய அரசுப் பேரவைக்கான பொதுத்தேர்தல், இடைத்தேர்தல்களுக்கோ உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கோ வேட்பாளர்களை நியமிப்பது இக் குழுவின் பொறுப்பாகும்.

16.2. உள்ளூராட்சி மன்ற நியமனங்களில் தேவையேற்படுமிடத்து மத்திய செயற்குழு இவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டியோரை நியமிக்கும்.

## விதி – 17

### இணைந்த நிறுவகங்கள் :

17.1. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்று கூட்டணியின் நோக்கத்திற்குப் பாதகமற்ற வகையில் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் காத்து, கூட்டணியோடு இணைந்து இயங்க முன்வரும் நிறுவகங்களை வேண்டிய நிபந்தனைகளுக்கு அமைவாக இணைந்த நிறுவகமாக ஏற்றுக் கொள்ள மத்திய செயற்குழுவுக்கு அதிகாரமுண்டு, இம் முடிவு பொதுச்சபையின் அங்கீகாரம் பெற்று நடைமுறைக்கு வரும்.

17.2. இணைந்த நிறுவகங்கள் சார்பில் மத்திய செயற்குழுவினால் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் பொதுக்குழுவில் இடம் பெறுவர்.

17.3. இவ்வாறு பொதுக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் விவாதங்களில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை கூறும் உரிமை உடையர். எனினும் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

17.4. இணைந்த நிறுவனத்தின் உறுப்பினர் எவரையும் அவர் கூட்டணியின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து நடக்க உறுதியளிக்குமிடத்து கூட்டணி வேட்பாளராக எத் தேர்தலுக்கும் நியமிக்க தேர்தல் நியமனக்குழுவுக்கு உரிமை உண்டு. அத்தகைய நியமனம் மத்திய செயற்குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

## விதி – 18

### தேர்தல்கள் :

18.1. மூலக்கிளைகளின் அலுவலர் தேர்தல்கள் உறுப்பினர்களின் கூட்டத்தில் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.

18.2. தொகுதிக்கிளை அலுவலர் தேர்தலும் தொகுதிக்கிளை உறுப்பினர் கூட்டத்தில் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.

18.3. தொகுதிக்குழு, அத் தொகுதிப் பிரதிநிதிகளாக பொதுக் குழுவில் இடம் பெறும் மூன்று அலுவலர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்.

15.3. நடவடிக்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எந்த விடயத்தையும் ஒட்டி மூன்று மாதங்களுக்கிடையில் இறுதி முடிவெடுக்க வேண்டியது ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் கடமையாகும். தவறினால் மத்திய செயற்குழு உடன் நடவடிக்கை எடுக்கும்.

## விதி – 16

### தேர்தல் நியமனக்குழு :

16.1. தேசிய அரசுப் பேரவைக்கான பொதுத்தேர்தல், இடைத்தேர்தல்களுக்கோ உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கோ வேட்பாளர்களை நியமிப்பது இக் குழுவின் பொறுப்பாகும்.

16.2. உள்ளூராட்சி மன்ற நியமனங்களில் தேவையேற்படுமிடத்து மத்திய செயற்குழு இவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டியோரை நியமிக்கும்.

## விதி – 17

### இணைந்த நிறுவகங்கள் :

17.1. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்று கூட்டணியின் நோக்கத்திற்குப் பாதகமற்ற வகையில் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் காத்து, கூட்டணியோடு இணைந்து இயங்க முன்வரும் நிறுவகங்களை வேண்டிய நிபந்தனைகளுக்கு அமைவாக இணைந்த நிறுவகமாக ஏற்றுக் கொள்ள மத்திய செயற்குழுவுக்கு அதிகாரமுண்டு, இம் முடிவு பொதுச்சபையின் அங்கீகாரம் பெற்று நடைமுறைக்கு வரும்.

17.2. இணைந்த நிறுவகங்கள் சார்பில் மத்திய செயற்குழுவினால் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் பொதுக்குழுவில் இடம் பெறுவர்.

17.3. இவ்வாறு பொதுக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் விவாதங்களில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை கூறும் உரிமை உடையர். எனினும் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

17.4. இணைந்த நிறுவனத்தின் உறுப்பினர் எவரையும் அவர் கூட்டணியின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து நடக்க உறுதியளிக்குமிடத்து கூட்டணி வேட்பாளராக எத் தேர்தலுக்கும் நியமிக்க தேர்தல் நியமனக்குழுவுக்கு உரிமை உண்டு. அத்தகைய நியமனம் மத்திய செயற்குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

## விதி – 18

### தேர்தல்கள் :

18.1. மூலக்கிளைகளின் அலுவலர் தேர்தல்கள் உறுப்பினர்களின் கூட்டத்தில் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.

18.2. தொகுதிக்கிளை அலுவலர் தேர்தலும் தொகுதிக்கிளை உறுப்பினர் கூட்டத்தில் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.

18.3. தொகுதிக்குழு, அத் தொகுதிப் பிரதிநிதிகளாக பொதுக் குழுவில் இடம் பெறும் மூன்று அலுவலர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்.

18.4. மாநில மாநாட்டிற்கு குறைந்தது 15 நாட்களுக்கு முன் கூட்டப்படும். விசேட பொதுக்குழுக் கூட்டத்தில் கீழ்க் கண்ட அலுவலர்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர்.

1. தலைவர்
2. செயலாளர் நாயகம்
3. சிரேட்ட துணைத்தலைவர்
4. அமைப்பு நிருவாகச் செயலாளர்
5. இணைப்பொருளாளர்
6. நான்கு துணைத்தலைவர்கள்
7. ஐந்து செயலாளர்கள்
8. ஐந்து மத்திய செயற்குழு உறுப்பினர்கள்.

18.5. மேற்கூறிய பதவிகள் எதற்கும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் எவரும் இவ்வமைப்பு விதிகள் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன் குறைந்தது மூன்று வருடங்களுக்காவது கூட்டணியுடன் ஈடுபட்டவராக இருத்தல் வேண்டும். அல்லது குறைந்தது ஐந்து வருடங்களுக்காவது உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

18.6. இத் தேர்தல்களை நடாத்துவதற்கான பொறுப்பு செயலாளர் நாயகத்தைச்சாரும்.

## விதி – 19

### அமைப்பு விதித் திருத்தங்கள் :

19.1. கூட்டணியின் நோக்கம், அடிப்படைக் கொள்கைகள் தவிர்ந்த ஏனைய அமைப்பு விதிகளின் திருத்தங்கள் பொதுக்குழுக் கூட்டத்தில் முன்னறிவித்தலுடன் கொண்டுவரப்பட்டு, சமூகமளித்திருக்கும் பொதுக்குழு உறுப்பினரில் குறைந்தது 2/3 பங்கினரால் நிறைவேற்றப்படலாம்.

19.2. கூட்டணியின் நோக்கம், அடிப்படைக் கொள்கைகள் பற்றிய எத்திருத்தமும் முதலில் விடயாலோசனைச் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருடாந்த மாநாட்டில் அல்லது விசேட மாநாட்டில் பிரதிநிதிகளில் குறைந்தது 2/3 பங்கினரால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

19.3. எந்த மூலக்கிளையோ, தொகுதிக்கிளையோ இளைஞர் பேரவையோ, மகளிர் பேரவையோ திருத்தங்களைப் பொதுக்குழுவுக்கு அனுப்ப உரிமையுடையவர்.

## விதி – 20

### அலுவலர் பதவிக்காலம் :

20.1. மாநில மாநாட்டின் முன் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் மாநில மாநாட்டின் முதல்நாள் விடயாலோசனைக் குழுக்கூட்டத்தில் பதவியேற்பர்.

20.2. அடுத்த மாநில மாநாட்டு முதல்நாள் விடயாலோசனைக் கூட்ட ஆரம்பத்தில் புதிய அலுவலர்களிடம் பொறுப்பைக் கையளித்துப் பதவியிலிருந்து விலகுவர்.

20.3. மூலக்கிளை செயற்குழு உறுப்பினரோ தொகுதிக்குழு உறுப்பினரோ பொதுக்குழு உறுப்பினரோ தகுந்த காரணமின்றி மூன்று கூட்டங்களுக்குச் சமூகமளிக்கத் தவறின் தம் பதவியையும் அச் குழுவின் உறுப்புரிமையையும் இழந்தவராக கருதப்படுவர்.

20.4. ஏற்றுக்கொள்ளப்படும் விலகலினாலோ, ஒழுங்கு நடவடிக்கையின் பின் நீக்கப்படுவதாலோ, வேறு காரணத்தினாலோ வெற்றிடமாகும் பதவிகள், மத்திய செயற்குழுவினால் நிரப்பப்படும்.

## விதி – 21

**பொது :**

21.1. இவ்வமைப்பு விதிகளின் நடைமுறை பற்றிய தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மத்திய செயற்குழுவுக்கே உண்டு.

21.2. தேவையேற்படுமிடத்து அமைப்பு விதிகளில் இடைக்கால மாற்றங்களைச் செய்து பின் பொதுக் குழுவின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு மத்திய செயற்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

21.3. இவ்வமைப்பு விதிகள் 1978ம் ஆண்டு யூன் மாதம் 24ம் திகதி முதல் (24.6.78) நடைமுறைக்கு வரும்.

(திருத்தப்பட்ட அமைப்பு விதிகள்)

**மத்திய செயற்குழு :**

9.1. 2011ம் ஆண்டு மத்திய செயற்குழு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 2019ம் ஆண்டு மேலும் பொதுக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக மத்திய செயற்குழுவின் உறுப்பினர்கள் மொத்தம் அறுபத்தெட்டு (68) பேர் இடம்பெறுவார்.

☆ ☆ ☆